# 88/2025-T

| Question Booklet Alpha Code | A | Question Booklet Serial Number |
|---|---|---|

| Total Number of Questions : 100 | Time : 1 Hour 30 Minutes |
|---|---|
| Maximum Marks : 100 | |

A

### INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet Alpha Code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the Alpha Code does not match to the allotted Alpha Code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same Alpha Code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same Alpha Code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

DO NOT WRITE HERE

1. பிரெஞ்சுப் புரட்சியின் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) வால்டேர்
(B) மாண்டெஸ்கியூ
(C) ரூசோ
(D) பதினான்காம் லூயி

2. எந்த திருவிதாங்கூர் மன்னரின் ஆட்சிக் காலத்தில் பண்டார பாட்ட பிரகடனம் வெளியிடப்பட்டது?

(A) மார்த்தாண்ட வர்மா
(B) ஆயில்யம் திருநாள்
(C) அனிழம் திருநாள்
(D) விசாகம் திருநாள்

3. ரஷ்யப் புரட்சி எந்த ஆண்டில் நடைபெற்றது?

(A) 1916
(B) 1918
(C) 1919
(D) 1917

4. 1857 ஆம் ஆண்டு புரட்சி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

1. 1857 ஆம் ஆண்டு புரட்சி முதலில் சூரத்தில் வெடித்தது.
2. டெல்லியில் புரட்சியின் தலைவராக இரண்டாம் பகதூர் ஷா இருந்தார்.
3. கான்பூரில் புரட்சியின் தலைவராக கன்வர் சிங் இருந்தார்.
4. அவத் மற்றும் லக்னோவில் புரட்சியை பேகம் ஹஸ்ரத் வழிநடத்தினார்.

(A) 1 மற்றும் 4
(B) 2 மற்றும் 4
(C) 1 மற்றும் 3
(D) 1, 3 மற்றும் 4

5. ‘இராணுவ உதவி அமைப்பு’-ஐ செயல்படுத்தியது யார்?

(A) லார்டு லிட்டன்
(B) லார்டு வெல்லஸ்லி
(C) லார்டு டல்ஹவுசி
(D) லார்டு காரன்வாலிஸ்

6. 2024 ஆம் ஆண்டில் கேரளாவில் எந்த வரலாற்று நிகழ்வின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது?

(A) ஆலயப் பிரவேசப் பிரகடனம்
(B) குருவாயூர் சத்தியாகிரகம்
(C) கையூர் போராட்டம்
(D) வைக்கம் சத்தியாகிரகம்

7. டிசம்பர் 2009 இல், எவரெஸ்ட் அடிவார முகாமில் நடைபெற்ற நேபாள அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டத்தில் எந்தப் பிரச்சினையை குறித்து விவாதம் நடைபெற்றது?

i. அண்டை நாடுகளுடன் எல்லைத் தகராறு மற்றும் உலக அமைதி

ii. எவரெஸ்டில் கழிவு மேலாண்மை

iii. காலநிலை மாற்றம் மற்றும் பனிப்பாறைகள் உருகுதல்

(A) i சரியானது

(B) ii சரியானது

(C) iii சரியானது

(D) ii & iii சரியானவை

8. "உலகின் தானியக் களஞ்சியம்" என்று அழைக்கப்படும் "பிரெய்ரிகள்" எங்கே அமைந்துள்ளன?

i. அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் அமைந்துள்ளது

ii. கனடா மற்றும் அமெரிக்காவில் அமைந்துள்ளது

iii. கனடா மற்றும் கிரீன்லாந்தில் அமைந்துள்ளது

(A) ii சரியானது

(B) iii சரியானது

(C) i சரியானது

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை

9. 2023 இல் புதுதில்லியில் நடந்த ஜி20 உச்சி மாநாட்டின் முக்கிய முழக்கம் என்ன?

i. புவி வெப்பமடைவதைக் குறைத்தல்

ii. பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்

iii. ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்

(A) i சரியானது

(B) i & ii சரியானவை

(C) i & iii சரியானவை

(D) iii சரியானது

10. பமீலா ரூக்ஸ் இயக்கிய எந்தப் படம் இந்தியப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது?

i. ட்ரெயின் டு பாகிஸ்தான்

ii. பார்டிஷன்

iii. தமஸ்

iv. மேகே டாக்கா தாரே

(A) i (B) ii

(C) iii (D) iv

11. ஜம்மு-காஷ்மீரில் இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் உள்ள பக்லிஹார் அணை எந்த நதியில் அமைந்துள்ளது?

(A) ஜீலம் (B) பியாஸ்

(C) சட்லஜ் (D) செனாப்

12. மே 2, 2025 அன்று பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்ட விழிஞ்சம் துறைமுகத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?

i. இந்தியாவின் முதல் ஆழ்கடல் சரக்குத் துறைமுகம்

ii. இந்தியாவின் முதல் தானியங்கித் துறைமுகம்

iii. சர்வதேச கப்பல் வழித்தடத்தில் நேரடியாக அமைந்துள்ள ஒரே இந்தியத் துறைமுகம்

iv. இந்தியாவின் மிக ஆழமான அலைதாங்கி

(A) i & ii சரியானவை

(B) i & iii சரியானவை

(C) i & iv சரியானவை

(D) மேற்கண்ட அனைத்தும் சரியானவை

13. பின்வருவனவற்றில் எது இந்தியாவின் புதிய பொருளாதாரக் கொள்கையுடன் தொடர்புடையது அல்ல?

i. 1991 இல் தொடங்கப்பட்டது

ii. உலகமயமாக்கல்

iii. 'நரசிம்மம்' அறிக்கை

iv. கார்வே குழு

(A) i & ii மட்டும் (B) ii மட்டும்

(C) iii & iv மட்டும் (D) iv மட்டும்

14. டிரிட்டிகம் ஏஸ்டிவம் (Triticum aestivum) என்பது பின்வருவனவற்றில் எதன் அறிவியல் பெயர்?

(A) மக்காச்சோளம் (B) கோதுமை

(C) நெல் (D) எள்

15. இந்திய ரிசர்வ் வங்கி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

i. 1935-ம் ஆண்டில் நிறுவப்பட்டது

ii. வங்கிகளின் வங்கி என்று அழைக்கப்படுகிறது

iii. மும்பையில் தலைமையகத்தைக் கொண்டிருக்கிறது

iv. பணவியல் கொள்கையைக் கட்டுப்படுத்துகிறது

(A) i & ii சரியானவை

(B) i & iii சரியானவை

(C) i, ii & iv சரியானவை

(D) i, ii, iii மற்றும் iv அனைத்தும் சரியானவை

16. 2023 ஆசிய விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாகப் பின்வருவனவற்றில் எது சரியானது அல்ல?

(A) இந்தியா 28 தங்கப் பதக்கங்களை வென்றது

(B) இந்தியா, தரவரிசையில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது

(C) இது சீனாவின் ஹாங்சுவில் நடைபெற்றது

(D) அடுத்து இது ஜப்பானில் நடைபெறும்

17. பசுமைப் புரட்சி தொடர்பாகப் பின்வருவனவற்றில் எது உண்மையல்ல?

i. அதிக விளைச்சல் தரும் விதைகள் பயன்படுத்தப்பட்டன.

ii. இது 1980-களில் தொடங்கியது

iii. இதற்கு டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் தலைமை வகித்தார்.

iv. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு அதிகரித்தது.

(A) i & iv உண்மையானவை அல்ல

(B) i, ii & iv உண்மையானவை அல்ல

(C) ii உண்மையானது அல்ல

(D) iv உண்மையானது அல்ல

18. பின்வருவனவற்றில் எது 'அமிர்த காலம்' (Amrit Kaal) என்ற கருத்துடன் தொடர்புடையது அல்ல?

(A) 2022-23 மத்திய பட்ஜெட்

(B) இந்தியா @ 100

(C) 25 ஆண்டுகள் காலஅளவு

(D) சப்தரிஷி

19. இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது?

(A) 6 டிசம்பர் 1949

(B) 9 டிசம்பர் 1946

(C) 26 நவம்பர் 1949

(D) 9 நவம்பர் 1946

20. கல்வி பெறும் உரிமை தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

i. கல்வி பெறும் உரிமை என்பது 86-வது அரசியலமைப்புத் திருத்தத்துடன் தொடர்புடையது

ii. இந்தச் சட்டம் 2008-ல் செயல்பாட்டுக்கு வந்தது

iii. இது அரசியலமைப்பின் 21A பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது

(A) i & iii மட்டும்

(B) i & ii மட்டும்

(C) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் சரியானவை

(D) ii & iii மட்டும்

21. இந்திய அரசியலமைப்பில் உள்ள நீதிமன்ற மறுஆய்வு என்ற கருத்து எந்த அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டது?

(A) பிரிட்டன்

(B) அயர்லாந்து

(C) பிரான்ஸ்

(D) அமெரிக்கா

22. இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தற்போதைய தலைவர் யார்?

(A) கே.ஜி. பாலகிருஷ்ணன்

(B) வி. ராமசுப்ரமணியன்

(C) ரங்கநாத மிஸ்ரா

(D) டி. ஒய். சந்திரசூட்

23. அரசியலமைப்பின் எந்தப் பிரிவு சுதந்திரமாக இயங்கும் இந்தியத் தேர்தல் ஆணையத்தைப் பற்றிக் கூறுகிறது?

(A) 326 (B) 243

(C) 324 (D) 234

24. சொத்துரிமை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது தவறானது என்பதைக் கண்டறியவும்.

i. 42-வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் சொத்துரிமை என்பது அடிப்படை உரிமை அற்றதாக மாறியுள்ளது.

ii. சொத்துரிமை தற்போது அரசியலமைப்பின் 200A பிரிவில் இடம் பெற்றுள்ளது.

iii. 1973 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, சொத்துரிமை என்பது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக இல்லை.

(A) i & ii மட்டும்

(B) ii & iii மட்டும்

(C) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் தவறானவை

(D) i & iii மட்டும்

25. எந்த அரசியலமைப்புத் திருத்தம் வாக்களிக்கும் வயதை 21ல் இருந்து 18 ஆக மாற்றியது?

(A) 1992-ஆம் ஆண்டின் 73-வது அரசியலமைப்புத் திருத்தம்

(B) 1989-ஆம் ஆண்டின் 61-வது அரசியலமைப்புத் திருத்தம்

(C) 1987-ஆம் ஆண்டின் 55-வது அரசியலமைப்புத் திருத்தம்

(D) 1990-ஆம் ஆண்டின் 63-வது அரசியலமைப்புத் திருத்தம்

26. மாநிலப் பட்டியலில் உள்ள ஒரு துறையை தேசிய நலன் கருதி மத்தியப் பட்டியலுக்கோ அல்லது பொதுப் பட்டியலுக்கோ மாற்றுவதற்கு யாருடைய ஒப்புதல் தேவை?

(A) மக்களவை

(B) மாநில சட்டப் பேரவை

(C) மாநிலங்களவை

(D) மாநில ஆளுநர்

27. இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் பற்றி கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளில், சரியான ஒன்றைக் கண்டறியவும்.

i. துணை குடியரசுத் தலைவர் மாநிலங்களவையின் 'பதவிவழி தலைவர்' (ex-officio) ஆக இருக்கிறார்.

ii. மாநில சட்டப் பேரவைகளும் துணை குடியரசுத் தலைவர் தேர்தலில் பங்கேற்கின்றன.

iii. துணை குடியரசுத் தலைவர், பதவி நீக்கத் தீர்மானத்தின் மூலம் பதவியில் இருந்து நீக்கப்படுகிறார்.

(A) i & iii மட்டும்

(B) i & ii மட்டும்

(C) அனைத்து கூற்றுகளும் சரியானவை

(D) ii & iii மட்டும்

28. உலக நன்செய்/ஈரநில நாள் எப்போது அனுசரிக்கப்படுகிறது?

(A) ஜனவரி 6

(B) பிப்ரவரி 2

(C) மார்ச் 22

(D) ஏப்ரல் 24

29. பின்வருவனவற்றிலிருந்து மாநில நிதி ஆணையம் தொடர்பான சட்டங்களைக் கண்டறியவும்.

i. 1994-ஆம் ஆண்டு கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் பிரிவு 186

ii. 1994-ஆம் ஆண்டு கேரள நகராட்சி சட்டத்தின் பிரிவு 205

iii. 1994-ஆம் ஆண்டு கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் பிரிவு 183

(A) ii & iii மட்டும்

(B) i & iii மட்டும்

(C) அனைத்து சட்டங்களும் நிதி ஆணையத்தைப் பற்றி விவாதிக்கின்றன.

(D) i & ii மட்டும்

30. கேரள பேரிடர் மேலாண்மை ஆணையம் எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?

(A) 4 மே 2007

(B) 8 டிசம்பர் 2016

(C) 17 மே 1998

(D) 6 ஜூன் 2015

31. கேரள பஞ்சாயத்து ராஜ் சட்டம் எந்த ஆண்டு செயல்பாட்டுக்கு வந்தது?

(A) 23 ஏப்ரல் 1994
(B) 22 மார்ச் 1994
(C) 8 மே 1994
(D) 23 ஏப்ரல் 1993

32. மலேரியாவின் முக்கிய அறிகுறி, ஒரு நாள் விட்டு ஒரு நாள் குளிர் நடுக்கத்துடன் கூடிய காய்ச்சல் ஏற்படுவது ஆகும். இதற்குக் காரணம் பின்வருவனவற்றில் எது?

(A) ஹீமோகுளோபின்
(B) ஹீமோசீல்
(C) ஹீமோசோயின்
(D) ஹீமோபிலியா

33. எச்.ஐ.வி. தொற்றைக் கண்டறியும் சோதனைகள் யாவை?

(A) வைடால் (Widal) சோதனை
(B) ELISA (எலிசா)
(C) திசு ஆய்வு (பயாப்ஸி)
(D) PAP சோதனை

34. கொலஸ்ட்ரம் என்பது குழந்தை பிறந்த பிறகு உற்பத்தியாகும் முதல் தாய்ப்பால் ஆகும். அதில் எந்த இம்யூனோகுளோபுலின்கள் உள்ளது?

(A) Ig A
(B) Ig D
(C) Ig E
(D) Ig G

35. இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்தும் ஹார்மோன்கள் யாவை?

(A) அட்ரினலின், நார்எபிநெஃப்ரின்
(B) இன்சுலின், குளுகாகோன்
(C) தைமோசின், தைராக்சின்
(D) ஆக்சிடோசின், வாசோபிரசின்

36. புற்றுநோயைத் தடுப்பதற்காக 9 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசி எது?

(A) HPV
(B) HIB1
(C) IPV 1
(D) ரோட்டா வைரஸ் 1

37. பின்வருவனவற்றில் கேரளாவின் அழிந்துவரும் அபாயத்தில் உள்ள நன்னீர் மீன்கள் யாவை?

(A) கிரிப்டோக்லானிஸ் ஷாஜி

(B) ஹோராக்லானிஸ் அப்துல்கலாமி

(C) பாஞ்சியோ புஜிய

(D) எனிக்மாசன்னா கொல்லம்

(A) A, B, C (B) B, C, D

(C) இவற்றில் எதுவுமில்லை (D) A, B, C, D

38. ஒரு பெரிய நீர்வீழ்ச்சியின் உச்சியில் உள்ள நீரின் வெப்பநிலையை விட, அதன் அடிவாரத்தில் உள்ள நீரின் வெப்பநிலை அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன?

(A) கீழே விழும் நீர் சூரியனிடமிருந்து வெப்பத்தை உறிஞ்சுகிறது

(B) கீழே விழும் நீரின் இயக்க ஆற்றல் வெப்பமாக மாற்றப்படுகிறது

(C) கீழே உள்ள நீரில் அதிக நிலை ஆற்றல் உள்ளது.

(D) ஆற்றுப் படுகையில் உள்ள பாறை வெப்பத்தை வெளியிடுகிறது.

39. வளிமண்டல அழுத்தத்தில் தண்ணீர் 100°C வெப்பநிலையில் கொதிக்கிறது. அழுத்தம் குறைக்கப்பட்டால், அதன் கொதிநிலை என்னவாகும்?

(A) அதே வெப்பநிலையில் கொதிக்கும்

(B) அதிக வெப்பநிலையில் கொதிக்கும்

(C) குறைந்த வெப்பநிலையில் கொதிக்கும்

(D) கொதிக்காது.

40. பின்வருவனவற்றில் ஒளியின் பண்பியல்பாக இல்லாதது எது?

(A) வெற்றிடத்தில் பயணிக்கும் திறன் கொண்டது.

(B) ஒரு குறிப்பிட்ட வேகம் கொண்டது.

(C) ஆற்றலைக் கொண்டு செல்ல முடியும்.

(D) பயணிக்க ஒரு ஊடகம் தேவை

41. 'ஸ்டார்ஷிப்' விண்கலத்தை உருவாக்கிய விண்வெளி நிறுவனம் எது?

(A) ஸ்பேஸ்X (SpaceX)

(B) நாசா

(C) டி.ஆர்.டி.ஓ.

(D) ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ்

42. சோடியம் கார்பனேட் கரைசலின் pH மதிப்பு என்ன?

(A) 0

(B) 7-க்குக் கீழ்

(C) 7

(D) 7-க்கு மேல்

43. அணு எண் 23 கொண்ட தனிமம், தனிம வரிசை அட்டவணையின் எந்தத் தொகுதியைச் சேர்ந்தது?

(A) s தொகுதி

(B) p தொகுதி

(C) d தொகுதி

(D) f தொகுதி

44. 90 கிராம் நீரில் எத்தனை அலகுகள் (moles) உள்ளன?

(A) 5
(B) 10
(C) 0.5
(D) 1

45. மின்சார இஸ்திரிப் பெட்டியில் வெப்பமூட்டும் தனிமத்தை உருவாக்கப் பயன்படும் உலோகக்கலவை எது?

(A) டூராலுமின்

(B) நிக்ரோம்

(C) அல்நிக்கோ

(D) பெல்மெட்டல்

46. ராஜா ரவி வர்மா பற்றிய சரியான கூற்றுகளைக் கண்டறியவும்.

i. மேற்கத்திய ஓவிய பாணியில் அவர் வல்லுநராக இருந்தார்.

ii. 'சகுந்தலா' என்பது அவரின் ஒரு பிரபலமான ஓவியம்.

iii. கிளிமானூர் அரண்மனையில் அவர் பிறந்தார்.

(A) ii & iii மட்டுமே சரியானவை

(B) i மட்டும் சரியானது

(C) iii மட்டும் சரியானது

(D) i, ii & iii அனைத்தும் சரியானவை

47. 'என்டெ குருநாதன்' என்ற கவிதை பின்வரும் தொகுப்புகளில் எதிலிருந்து எடுக்கப்பட்டது?

(A) சாகித்ய மஞ்சரி பகுதி 1
(B) சாகித்ய மஞ்சரி பகுதி 4
(C) சாகித்ய மஞ்சரி பகுதி 3
(D) சாகித்ய மஞ்சரி பகுதி 2

48. செவ்வியல் (classic) இயக்கத்தில் ஒரு காதல் கவிதையாகவும், காதல் இயக்கத்தில் ஒரு செவ்வியல் (classic) கவிதையாகவும் விவரிக்கக்கூடிய படைப்பு எது?

(A) அஸ்வமேதம்
(B) நளசரிதம் அட்டக்கதா
(C) மைக்கேலேஞ்சலோ – வரைபடம்
(D) நளினி

49. 2025 ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் டிராபி ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடர்பான தவறான கூற்று எது?

i. இறுதிப் போட்டியில் நியூசிலாந்திற்கு எதிராக இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
ii. சாம்பியன்ஸ் டிராபியில் இந்தியா தனது மூன்றாவது பட்டத்தை வென்றது.
iii. ரோஹித் சர்மா, தொடரின் நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

(A) i & ii ஆகியவை சரியானவை அல்ல
(B) ii & iii ஆகியவை சரியானவை அல்ல
(C) i மட்டுமே சரியானதல்ல
(D) iii மட்டுமே சரியானதல்ல

50. சரியான கூற்றைக் கண்டறியவும்.

i. சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர், ஆன் மெக்லைன் மற்றும் நிக்கோல் அயர்ஸ் ஆகியோருடன் புளோரிடா கடற்கரையோரத்தில் உள்ள கடலில் விண்வெளியில் இருந்து தரையிறங்கினர்.
ii. 'ஸ்பேஸ்எக்ஸ்' ஒரு ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனம்.
iii. சுனிதா வில்லியம்ஸும் புட்ச் வில்மோரும் 286 நாட்கள் விண்வெளியில் கழித்து அதன் பிறகு பூமிக்குத் திரும்பினர்.

(A) i மட்டுமே சரியானது
(B) iii மட்டுமே சரியானது
(C) i & ii ஆகியவை சரியானவை
(D) ii & iii ஆகியவை சரியானவை

51. $\frac{3}{8}$ இன் தசம வடிவம் என்ன?

(A) 0.75 (B) 0.375

(C) 0.03 (D) 0.075

52. ஒரு தொகைக்கு 5% ஆண்டு வட்டி விகிதத்தில் 2 ஆண்டுகளுக்குக் கிடைத்த தனி வட்டி ரூ. 200. அதே தொகைக்கு, அதே வட்டி விகிதத்தில், 2 ஆண்டுகளுக்கு ஈட்டப்படும் கூட்டு வட்டி எவ்வளவு?

(A) 2000 (B) 2005

(C) 2200 (D) 2205

53. ஒரு திரவத்தில் அமிலம் மற்றும் நீர் 4:3 என்ற விகிதத்தில் உள்ளன. அதனுடன் 10 லிட்டர் அமிலம் சேர்க்கும்போது, விகிதம் 3:1 ஆக மாறுகிறது. தற்போது அந்த திரவத்தில் எத்தனை லிட்டர் அமிலமும் மற்றும் நீரும் உள்ளன?

(A) 18, 6 (B) 6, 18

(C) 12, 3 (D) 3, 12

54. அப்புவின் அம்மாவின் வயது, அப்புவின் வயதைப் போல ஒன்பது மடங்காகும். 9 ஆண்டுகளுக்குப் பிறகு, அது மூன்று மடங்காக இருக்கும். எனில், அப்புவின் தற்போதைய வயது என்ன?

(A) 6 (B) 3

(C) 2 (D) 4

55. கோணங்களின் கூட்டுத்தொகை $8100^\circ$ ஆக உள்ள ஒரு பலகோணத்திற்கு எத்தனை பக்கங்கள் உள்ளன?

(A) 45 (B) 46

(C) 47 (D) 49

56. ஒரு சதுரத்தின் மூலைவிட்டத்தின் நீளம், அதன் பக்கத்தின் நீளத்தைப் போல எத்தனை மடங்கு இருக்கும்?

(A) 4 (B) 2

(C) $\sqrt{3}$ (D) $\sqrt{2}$

57. ஒரு கடிகாரத்தில் நேரம் 10:30 என இருக்கும்போது, நிமிட முள்ளுக்கும் மணி முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் என்ன?

(A) 315
(B) 90
(C) 135
(D) 180

58. $(0.25)^6$ ஐ எந்த எண்ணால் பெருக்கினால் $(0.25)^4$ கிடைக்கும்?

(A) 8
(B) 16
(C) 4
(D) 32

59. 3 மற்றும் 81 ஆகிய எண்களுக்கு இடையில், இரண்டு எண்களை சேர்க்கவும், அந்த சேர்க்கை வரிசை ஒரு பெருக்குத் தொடர் வரிசையாக அமைந்தால், அந்த இரண்டு எண்கள் யாவை?

(A) 9, 27
(B) 27, 9
(C) 6, 15
(D) 2, 36

60. ஒரு வாகனம், தனது பயணத்தின் முதல் 120 கி.மீ தூரத்தை மணிக்கு 30 கி.மீ சராசரி வேகத்திலும், அடுத்த 120 கி.மீ தூரத்தை மணிக்கு 20 கி.மீ சராசரி வேகத்திலும் கடந்தது. எனில், முழுப் பயணத்தின் சராசரி வேகம் என்ன?

(A) 20
(B) 24
(C) 25
(D) 26

61. பாரதிய நியாய சம்ஹிதாவின் (BNS) படி, ஒரு தண்டனையை நிறைவேற்றும்போது, எந்தவொரு சூழலிலும் தனிமைச் சிறை எத்தனை நாட்களுக்கு மிகைப்பட்டதாக இருக்கக்கூடாது?

(A) 14
(B) 10
(C) 7
(D) 21

62. பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதாவின் (BNSS) எந்த அத்தியாயம், சட்டம் மற்றும் ஒழுங்கையும், அமைதியையும் பராமரிப்பதைப் பற்றி விளக்குகிறது?

(A) அத்தியாயம் X
(B) அத்தியாயம் XI
(C) அத்தியாயம் IX
(D) அத்தியாயம் XII

63. கேரள காவல்துறைச் சட்டத்தின்படி, மாநிலப் பாதுகாப்பு ஆணையத்தின் செயலாளர் யார்?

(A) உள்துறை அமைச்சர்

(B) உள்துறை செயலாளர்

(C) மாநில காவல்துறை தலைவர்

(D) தலைமைச் செயலாளர்

64. மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனையுடன் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தைச் செய்வதற்கான சதியை மறைத்து, அதன் விளைவாக அந்தக் குற்றம் செய்யப்பட்டால், சதியை மறைத்த நபருக்குக் கிடைக்கக்கூடிய அதிகபட்ச தண்டனை என்ன?

(A) மரண தண்டனை

(B) ஆயுள் தண்டனை

(C) மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை

(D) ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை

65. BNSS பிரிவு _____ இன் படி, கைது செய்யப்பட்ட நபருக்கு, அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணங்களையும், ஜாமீனில் வெளிவருவதற்கான உரிமையையும் பற்றித் தெரிவிக்க வேண்டும்.

(A) பிரிவு 47

(B) பிரிவு 49

(C) பிரிவு 50

(D) பிரிவு 51

66. கேரள காவல்துறைச் சட்டத்தின் பிரிவு 64, பின்வருவனவற்றில் எதை விளக்குகிறது?

(A) பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரிய குற்றம் (Cognizable offence)

(B) சமுதாயக் காவலாண்மை (Community policing)

(C) முறை/ரோந்து காவல் சேவை (Beat police service)

(D) பொதுமக்களுக்கு வெகுமதி

67. எந்தவொரு குற்றத்திற்காகவும் குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபருக்கு எதிராக, ஒரு காவல்துறை அதிகாரியிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை நிரூபண சாட்சியமாக எடுத்துக் கொள்ள முடியாது என்று இந்திய தண்டனைச் சட்டத்தின் எந்தப் பிரிவு கூறுகிறது?

(A) பிரிவு 27

(B) பிரிவு 26

(C) பிரிவு 23

(D) பிரிவு 33

68. எவரேனும், தனது ஏதேனும் ஒரு சைகையின் மூலமோ அல்லது தயாரிப்பின் மூலமோ, ஒரு நபருக்கு எதிராக குற்றமுறு வன்முறை பயன்படுத்தப்பட உள்ளது என்று அந்த நபரை உணரச் செய்தாலோ அல்லது பயப்படுமாறு செய்தாலோ, அவர் _____ குற்றத்தைச் செய்ததாகக் கருதப்படுவார்.

(A) பாலியல் வன்கொடுமை

(B) தனிப்பட்ட தாக்குதல்

(C) தாக்குதல்

(D) அத்துமீறல்

69. பாரதிய சாக்ஷ்ய அதினியம் (BSA) படி, ஒரு கேலிச்சித்திரம் என்பது ஒரு _____

(A) பதிவு

(B) பதிவு அல்ல

(C) கருத்து

(D) ஆவணம்

70. ஒரு கிராமத்தின் விவகாரங்களைக் கையாள நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரியும், பின்வரும் தகவல்களை அருகிலுள்ள மாஜிஸ்திரேட்டிற்கோ அல்லது அருகிலுள்ள காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரிக்கோ தெரிவிக்க வேண்டும்:

x. திருட்டுப் பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் பெயர் பெற்ற ஒரு நபர் கிராமத்திலோ அல்லது அருகிலோ நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக குடியிருப்பது.

y. கிராமத்திலோ அல்லது அருகிலோ திடீர் அல்லது இயற்கைக்கு மாறான மரணம், அல்லது சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் ஏற்படும் மரணம், அல்லது ஒரு கிராமத்திலோ அல்லது அருகிலோ ஏதேனும் சடலம் அல்லது உடல் உறுப்பு காணப்படுவது.

(A) x மட்டும்

(B) y மட்டும்

(C) x & y

(D) தகவல் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை

71. போக்குவரத்துப் பாதுகாப்புக் குழுவின் தலைவராக யார் செயல்படுவார்?

(A) வட்டாரப் போக்குவரத்து அதிகாரி

(B) உள்ளாட்சி அமைப்பின் தலைவர்

(C) மாவட்ட நீதிபதி

(D) மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்

72. ஒன்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கடத்தும் குற்றத்திற்கான குறைந்தபட்ச தண்டனை என்ன?

(A) பத்து ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத்தண்டனை

(B) ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத கடுங்காவல் தண்டனை

(C) பத்து ஆண்டுகளுக்குக் குறையாத கடுங்காவல் தண்டனை

(D) 14 ஆண்டுகளுக்குக் குறையாத கடுங்காவல் தண்டனை

73. NDPS சட்டம் (போதைப்பொருள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் சட்டம்) யாருக்குப் பொருந்தும்?

(A) இந்தியாவிற்கு வெளியே உள்ள எந்தவொரு நபருக்கும்

(B) இந்தியாவிற்கு வெளியே உள்ள எந்தவொரு இந்தியக் குடிமகனுக்கும்

(C) உலகில் எந்தவொரு இடத்திலும் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு கப்பல் அல்லது விமானம்

(D) மேற்கூறிய எதுவும் இல்லை

74. 1985 ஆம் ஆண்டின் போதைப்பொருள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் (NDPS) சட்டத்தின் பிரிவு 31A-இன் கீழ் மரண தண்டனை விதிப்பது எந்தக் குற்றங்களுக்குப் பொருந்தும்?

(A) பிரிவுகள் 19, 24, 27A

(B) பிரிவுகள் 18, 24, 27A

(C) பிரிவுகள் 19, 25, 27A

(D) பிரிவுகள் 19, 24, 27B

75. B என்பவர் நடத்தும் ஒரு டியூஷன் சென்டரில் படிக்கும் பள்ளி மாணவர்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டி, B-ஐ அவமானப்படுத்தும் நோக்கத்தில் மட்டும், A என்பவர் ஒரு பொய்ப் புகாரைத் தாக்கல் செய்கிறார். A செய்த குற்றம் என்ன?

(A) போக்சோ சட்டத்தின் பிரிவு 21-ன் கீழ் தவறான புகார் அளித்த குற்றத்தை A செய்திருக்கிறார். அவருக்கு 6 மாதங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

(B) போக்சோ சட்டத்தின் பிரிவு 22-ன் கீழ் தவறான புகார் அளித்த குற்றத்தை A செய்திருக்கிறார். அவருக்கு 6 மாதங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

(C) போக்சோ சட்டத்தின் பிரிவு 23-ன் கீழ் தவறான புகார் அளித்த குற்றத்தை A செய்திருக்கிறார். அவருக்கு ஓராண்டு வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

(D) போக்சோ சட்டத்தின் பிரிவு 24-ன் கீழ் தவறான புகார் அளித்த குற்றத்தை A செய்திருக்கிறார். அவருக்கு 6 மாதங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

76. போக்சோ சட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(A) ஒரு ஊடக நிருபர், பாதிக்கப்பட்ட குழந்தையின் பெற்றோரது ஒப்புதலின்றி குழந்தையின் பெயரை வெளிப்படுத்தக்கூடாது.

(B) ஒரு ஊடக நிருபர், சம்பந்தப்பட்ட குழந்தையின் ஒப்புதலின்றி பாதிக்கப்பட்ட குழந்தையின் பெயரை வெளிப்படுத்தக்கூடாது.

(C) குழந்தைகள் நலவாழ்வு குழுவின் ஒப்புதலின்றி, ஒரு ஊடக நிருபர் பாதிக்கப்பட்ட குழந்தையின் பெயரை வெளிப்படுத்தக்கூடாது.

(D) போக்சோ சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தின் ஒப்புதலின்றி, ஒரு ஊடக நிருபர் பாதிக்கப்பட்ட குழந்தையின் பெயரை வெளிப்படுத்தக்கூடாது.

77. A என்பவர், B-இன் கணினியில் சேமிக்கப்பட்டிருந்த தகவல்களை, B இல்லாத போதும், அவருடைய அனுமதியின்றியும், மோசடியாகப் பதிவிறக்கம் செய்து அவற்றை நகல் எடுக்கிறார். A-ஐ குற்றவியல் ரீதியாகப் பொறுப்பாக்க முடியுமா?

(A) தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (IT Act) பிரிவு 66-ன் கீழ் A குற்றவியல் ரீதியாக பொறுப்பானவராக ஆக்கப்படலாம்.

(B) தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (IT Act) பிரிவு 65-ன் கீழ் A குற்றவியல் ரீதியாக பொறுப்பானவராக ஆக்கப்படலாம்.

(C) இல்லை. தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (IT Act) பிரிவு 43-ன் கீழ் இழப்பீடு வழங்க மட்டுமே A பொறுப்பாவார்.

(D) இல்லை. தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (IT Act) பிரிவு 44-ன் கீழ் இழப்பீடு வழங்க மட்டுமே A பொறுப்பாவார்.

78. தகவல் தொழில்நுட்பச் சட்டம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

| | |
|---|---|
| 1. தகவல்தொடர்பு சேவையின் மூலம் தவறான செய்திகளை அனுப்புவதற்கான தண்டனை. | i. பிரிவு 66A |
| 2. அடையாளத் திருட்டுக்கான தண்டனை. | ii. பிரிவு 66D |
| 3. கணினி ஆதார வளங்களைப் பயன்படுத்தி ஆள்மாறாட்டத்தின் மூலம் மோசடி செய்வதற்கான தண்டனை. | iii. பிரிவு 66E |
| 4. தனியுரிமையை மீறுவதற்கான தண்டனை. | iv. பிரிவு 66C |

(A) 1 – i, 2 – ii, 3 – iii, 4 – iv

(B) 1 – ii, 2 – i, 3 – iv, 4 – iii

(C) 1 – i, 2 – iv, 3 – ii, 4 – iii

(D) 1 – iv, 2 – iii, 3 – ii, 4 – i

79. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(A) மாநிலத் தகவல் அதிகாரி, மூன்றாம் தரப்பு தகவலை எந்தவொரு நபருக்கும் வழங்க விரும்பினால், தகவல் கோரப்பட்ட 10 நாட்களுக்குள் அந்த மூன்றாம் தரப்பினருக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பு வழங்க வேண்டும்.

(B) வர்த்தகம் அல்லது வணிக இரகசியங்களை பொறுத்தவரை மூன்றாம் தரப்பு தகவல்களை ஒருபோதும் வெளியிடக்கூடாது.

(C) மூன்றாம் தரப்பு தகவல்களை வழங்குவதற்கான முடிவு குறித்த அறிவிப்பிற்கு மேல்முறையீடு செய்ய முடியாது.

(D) மேற்கூறிய எதுவும் இல்லை

80. எந்தெந்தச் சூழ்நிலைகளின் கீழ் தகவல்களை வழங்க தகவல் அறியும் உரிமைச் சட்ட அதிகாரி மறுக்கலாம்?

(A) மூன்றாம் தரப்பு தகவல் சம்பந்தப்பட்டிருக்கும் போது

(B) அது அரசுக்குச் சொந்தமான பதிப்புரிமையை மீறும் போது

(C) அரசுடன் தொடர்பில்லாத ஒரு நபரின் பதிப்புரிமை மீறப்படும் போது

(D) மேற்கூறிய எதுவும் இல்லை

81. ஒரு தொடர் நேரடிப்பொருளை உணர்த்தாமல் காலத்தால் வழங்கும் பொருளை உணர்த்துவது

(A) மரபுத்தொடர

(B) பண்புத்தொகை

(C) வினையடை

(D) பெயரச்சம்

82. 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' – இதில் யாக்கை என்ற சொல்லின் பொருள்

(A) உயிர்

(B) உடல்

(C) நோய்

(D) தண்ணீர்

83. 'ஆழம் தெரியாமல் காலை விடாதே' என்பதற்கு இணையான ஆங்கிலப் பழமொழி

(A) All that glitters is not gold.

(B) Look before you leap.

(C) Face is the index of Mind.

(D) Health is wealth.

84. பெட்டை என்பதற்கான ஆண்பால்

(A) வானரம் (B) சேவல்

(C) பிடி (D) கடுவன்

85. 'Software' என்பதன் தமிழ்ச் சொல்

(A) வன்பொருள் (B) சிறுபொருள்

(C) மென்பொருள் (D) இளம்பொருள்

86. 'கல்' என்ற சொல்லின் இருபொருள்

(A) கல்விகற்றல், உப்பு (B) கல்விகற்றல், பாறை

(C) உப்பு, பாறை (D) கல்விகற்றல், மலை

87. அழகு என்னும் பொருளைத்தரும் இன்னொரு சொல் எது?

(A) எழில் (B) ஆழி

(C) வரை (D) பரிதி

88. பால் + சோறு = பாற்சோறு எனப் புணர்வது எவ்வகைப் புணர்ச்சி?

(A) தோன்றல் (B) திரிதல்

(C) கெடுதல் (D) இயல்பு

89. பந்து என்ற சொல்லில் 'து' குறுகி ஒலிப்பதால் இது

(A) குற்றியலுகரம் (B) குற்றியலிகரம்

(C) மகரக்குறுக்கம் (D) இவையேதுமில்லை

90. எழுச்சி என்ற சொல்லின் எதிர்ச்சொல் எது?

(A) உயர்ச்சி (B) தளர்ச்சி

(C) வீழ்ச்சி (D) மகிழ்ச்சி

**91. Change the following into Indirect Speech:**

**The teacher said, "The Earth revolves around the Sun."**

**(A) The teacher said that the Earth revolved around the Sun.**

**(B) The teacher said that the Earth had revolved around the Sun.**

**(C) The teacher said that the Earth revolves around the Sun.**

**(D) The teacher said that the Earth is revolving around the Sun.**

92. Find the error and write the correct sentence:

(A) I am working here since 2019.

(B) I have been working here since 2019.

(C) I was working here since 2019.

(D) I had worked here since 2019.

93. Pick the correct comparative degree sentence:

(A) My car is more fast than yours.

(B) My car is fastest than yours.

(C) My car is as faster as yours.

(D) My car is faster than yours.

94. Add suitable question tag to the following sentence:

Let's go for a walk, _____?

(A) will we?

(B) won't you?

(C) shall we?

(D) shall you?

95. Complete the sentence by adding a suitable word given below:

If she had studied harder, she ______ passed the exam.

(A) would

(B) will

(C) would have

(D) had

96. Select the sentence with the correct collective noun:

(A) A pride of lions roamed the forest.

(B) A fleet of cows grazed in the field.

(C) A bundle of birds flew in the sky.

(D) A troop of fish swam by.

**97. Choose the correct one-word substitute:**

**A person who does not believe in the existence of God is called a:**

**(A) Theist** | **(B) Fatalist**

**(C) Atheist** | **(D) Agnostic**

**98. Choose the antonym of "Abundant".**

**(A) Excess**

**(B) Ample**

**(C) Scanty**

**(D) Overflowing**

**99. Choose the correct spelling:**

**(A) Miscellaneous**

**(B) Mischellaneous**

**(C) Misscelaneous**

**(D) Miscellaneus**

**100. Fill in the blank:**

**The minister presided ______ the meeting.**

**(A) over** | **(B) at**

**(C) in** | **(D) by**

SPACE FOR ROUGH WORK